<u>**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி**</u>

<u>**O.S.No. 150 / 2024**</u>

12.11.2025 வா.சா.1    திரு. பாலமுருகன்

சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

<u>**வாதி தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி**</u>

1. 03.08.2020 ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தின் (கணினி சான்றிட்ட நகல்)

   **வாசாஆ.9**

<u>**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. எனது தாத்தா பெயர் சப்பாணி என்று சொன்னால் சரிதான். சப்பாணி உடன் பிறந்த சகோதரி பெயர் தங்கம்மாள் என்றால் சரிதான். தங்கம்மாள் கணவர் பெயர் அழகுமுத்து என்றால் சரிதான். சப்பாணி என்பருக்கு எனது அப்பா மாடசாமி, 1–ம் பிரதிவாதி மற்றும் இறந்து போன சுப்பையா, பார்வதி, புதியாள், சங்கரம்மாள் ஆகியோர் வாரிசு என்றால் சரிதான். சப்பாணி என்பவருக்கு இரண்டாவது மனைவி மூலம் இரண்டு வாரிசுகள் உள்ளது என்றால் சரிதான்.
2. தபசில் சொத்துகள் அழகுமுத்து என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்த சொத்துகளில் கிடைத்த வருமானத்தின் அடிப்படையில் தங்கம்மாள் பெயரில் வாங்கப்பட்ட சொத்துகள் என்று சொன்னால் சரிதான். தங்கம்மாள் மற்றும் அழகுமுத்திற்கு குழந்தைகள் இல்லை என்று சொன்னால் சரிதான். தபசில் சொத்துகள் அனைத்தும் தங்கம்மாள் பெயரில் கிரையம் வாங்கப்பட்டு அவரின் சொத்துகளாக இருந்தது என்றால் சரிதான்.
3. தங்கம்மாள், கணேசன் அனைவரும் ஒரே வீட்டில் குடியிருந்து குடும்ப அட்டை வழங்கப்பட்டிருந்தது என்றால் ரேஷன் கார்டு வழங்கப்பட்டிருந்தது ஆனால் தனியாக தங்கம்மாள் குடியிருந்தார். தங்கள்மமாள் தனியாக குடியிருந்து வந்தார் என்பதை காட்டுவதற்கு எந்த ஆவணமும் என்னிடம் இல்லை என்றால் சரிதான்.

4. மேலகுன்னத்துார், சர்வே எண். 533/2ல் உள்ள 1 ஏக்கர் 28 செண்டு எனது தகப்பனார் அனுபவத்தில் இருந்து தற்போது என் அனுப்பவத்தில் உள்ளது என்று சொன்னால் சரியல்ல மேற்படி சர்வே எண்ணில் உள்ள சொத்தை இரண்டாக வரப்பு வைத்து பிரித்து நான் ஒரு பக்கமும், சுப்பையா என்பவரின் மகன் ராமசந்திரன் என்பவர் மற்றொரு பக்கமும் விவசாயம் செய்து வருகிறோம். மேற்படி சர்வே எண். 533/2ல் உள்ள 1 ஏக்கர் 28 செண்டு சொத்தானது தங்கம்மாள் கிரையம் பெற்ற சொத்து என்று சொன்னால் சரிதான். மேற்படி சொத்தை பொறுத்து தங்கம்மாள் என் பெயரிலே, மேற்படி ராமசந்திரன் பெயரிலோ எனது தந்தை பெயரிலே எந்த ஆவணமும் எழுதி கொடுக்கவில்லை என்றால் சரிதான்.

5. கீழகுன்னத்துார், சர்வே எண். 140ல் உள்ள 1 ஏக்கர் 20 செண்டின் ஒரு பகுதியை சுப்பையா என்பவரின் மகன் ராமசந்திரன் அனுபவம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான் மேற்படி சொத்தில் கணேசன் என்பவரும் அனுபவத்தில் உள்ளார். மேலகுன்னத்துாரில் உள்ள சர்வே எண். 229/58ல் உள்ள மனை மற்றும் ஒட்டு அடுக்கு மச்சு வீடு மற்றும் சர்வே எண். 229/59ல் உள்ள காலி மனையை என் பெயருக்கு தங்கம்மாள் என்பவர் கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் சரிதான் ஆனால் நாங்கள் பணம் எதுவும் தங்கம்மாளுக்கு கொடுக்கவில்லை. அவர் கைரேகை வைத்து 2014ம் வருடம் எழுதிக் கொடுத்தார்.

6. என்னிடம் காட்டப்படும் 20.05.2014ம் தேதியிட்ட கிரைய ஆவணமானது எனக்கு தங்கம்மாள் என்பவர் எழுதிக் கொடுத்தது என்று சொன்னால் சரிதான். **20.05.2014ம் தேதியிட்ட மேற்படி கிரைய ஆவணம் பிவாசாஆ.1 ஆகும்.** தங்கம்மாள் எனக்கு கிரையம் கொடுத்த விவரம், மற்றும் சர்வே எண். 533/2ல் தங்கம்மாள் சொத்தை நான் அனுபவம் செய்து வரும் விவரம் பற்றி வழக்குரையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல நான் சொல்லியுள்ளேன்.

7. 29.01.2021ல் வழக்கறிஞர் மூலமாக கணேசன் என்பவருக்கு நான் அறிவிப்பு அனுப்பினேன் என்று சொன்னால் சரிதான். மேற்படி அறிவிப்பில் தங்கம்மாள் அவர்களை ஏமாற்றி மோசடியாக கிரையம் ஏற்படுத்தியுள்ள விவரம் எனக்கு தெரிய வந்ததாக சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். இந்த வழக்கில் தங்கம்மாள் மோசடியாக கணேசனுக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் கிரையம் பற்றிய விவரம் அ.வ எண். 496/2021 வழக்கு தாக்கல் செய்யப்பட்ட பின்பு தான் தெரியவந்தது என்று இந்த வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.
8. 29.01.2021ம் தேதியிட்ட அறிவிப்பிலேயே 03.08.2020ம் தேதியிட்ட கிரைய ஆவணம், 26.10.2016ம் தேதியிட்ட உயில் ஆவணம் ஆகியவைகள் பற்றி குறிப்பிடபட்டு இருப்பதால் மேற்படி ஆவணங்கள் செல்லாது என மூன்று வருட காலம் கழித்து தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த வழக்கு கால வரையறை தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் சார்வு எதிர் வழக்குரையானது அ.வ.எண்.496/2021ல் வழக்கில் நான் தாக்கல் செய்தது என்று சொன்னால் சரிதான். **அ.வ.எண்.496/2021ல் என்ற வழக்கில் சார்வு செய்யப்பட்ட எதிர் வழக்குரை பிவாசாஆ.2 ஆகும்.**
9. அ.வ.எண்.496/2021ன் எதிர் வழக்குரையில் 24வது பத்தியில் தங்கம்மாள் காலம் ஆவதற்கு முன்பு சுமார் மூன்று ஆண்டுகளுக்கு முன்பு என்ன செய்கிறோம் என்று தெரியாத நிலையிலும் உடல் நலக்குறைவு காரணமாக இருந்தார் என்று சொல்லப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். தங்கம்மாள், கணேசன் என்பவருக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆனது 26.10.2016ம் தேதி தங்கம்மாள் இறப்பதற்கு 5 வருடங்களுக்கு முன்பு எழுதிக் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் எனக்கு மேற்படி விவரம் அசல் வழக்கு 496/2021 தாக்கல் செய்யப்பட்ட பின்னர் தான் தெரியும்.

10. தங்கம்மாள் இறந்தது 28.01.2021 என்று சொன்னால் சரிதான். மேற்படி உயில் எழுதப்பட்டு 4 ½ வருங்கள் கழித்து தான் தங்கம்மாள் இறந்துள்ளார் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலானது பதிவு செய்யப்பட்ட உயில் என்று சொன்னால் சரிதான். மேற்படி உயிலில் சாட்சி கையொப்பம் செய்த கமலம்மாள், முருகாண்டி, முருகன் ஆகியோருக்கும் எங்களுக்கும் எந்த சண்டை சச்சரவு இல்லை என்றால் சரிதான். மேற்படி உயிலில் தங்கம்மாள் போட்டோ ஒட்டப்பட்டு ஒவ்வொரு பக்கத்திலும் கைரேகை வைத்துள்ளார் என்றால் நான் மேற்படி உயிலை பார்க்கவில்லை மேற்படி உயிலை பற்றி எந்த விவரமும் எனக்கு தெரியாது.

11. மேற்படி உயிலை பற்றி இந்த வழக்குரையில் சொல்லப்பட்டுள்ள விவரங்கள் அனைத்து உயிலை பார்க்காமல் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். தங்கம்மாள் 26.10.2016 ல் எழுதிக் கொடுத்த உயிலானது அவரால் அறிந்து புரிந்து சாட்சிகள் முன்னிலையில் 1–ம் பிரதிவாதிக்கு சட்டப்படி எழுதிக் கொடுத்த உயில் என்று சொன்னால் சரியல்ல. அந்த நேரத்தில் அவர் நியாபக மறதி உடல் நல சரியில்லாமல் இருந்தார் மேலும் 86 வயதில் இருந்தார். எழுதப்படிக்க தெரியாத நபர் என்பதால் அவரை கூட்டி கொண்டு சென்று எழுதி வாங்கிவிட்டார்கள்.

12. நான் திருநெல்வேலி டவுண்ணில் ஆட்டோ சீட் வைத்து கொடுக்கும் தொழில் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி விவசாயம் செய்து வருகிறார் என்று சொன்னால் சரிதான். சாட்சி தானாக முன் வந்து நான் விவசாயமும் செய்து வருகிறேன் என்று சொன்னார்.

13. நான் 2021 ல் திருநெல்வேலி மாவட்ட ஆட்சி தலைவரிடம் கொடுத்த மனுவில் தங்கம்மாள் என்பவருக்கு கொடுத்த நிலத்தில் கட்டுகுத்தகைதாரராக பல ஆண்டுகளாக பயிர் செய்து வருகிறேன் என்றும் தங்கம்மாள் என்பவருக்கு பாட்டம் அளந்து வந்துள்ளேன் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். நான் எவ்வளவு காலமாக கட்டுகுத்தகை சம்சாரியாக தங்கம்மாளிடம் இருந்து வந்தேன் என்றால் 20

ஆண்டுகளாக. நான் கட்டு குத்தகை சம்சாரியாக இருந்து வரும் நிலமானது எனது கட்சிபடி சர்வே எண் 508/2, 533/2 என்று சொன்னால் சரிதான். மேற்படி நிலத்திற்கு வருட பாட்டமாக எவ்வளவு கொடுப்பேன் என்றால் எனது அப்பா இருந்த வரை ரூ7000/- வருடத்திற்கு கொடுத்தார் தங்கம்மாள் இறக்கும் காலம் வரை நான் ரூ10000 வருட பாட்டமாக கொடுத்தேன்.

(பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)

MARIMUTHU R MUNIYASAMY

Deposition uploaded on 12.11.2025
Digitally signed by MARIMUTHU R MUNIYASAMY
Date: 2025.11.12 18:06:13 +0530

Principal District Munsif,
Tirunelveli.